**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.332/2015 வா.சா.1 சேகர்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 10.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வா.சா.ஆ. 5 ஆவணத்தை நான் 08-04-2025 அன்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை 2015 ல் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதும் உள்ளதா என்றால் என் வழக்கறிஞர் அப்போது தேவையில்லை என கூறியிருந்தார். வா.சா.ஆ. 5 ஆவணம் பக்கம் எண். 153 ல் இருந்து தான் ஆரம்பம் ஆகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணம் பக்கம் எண். 160 ல் இருந்து 164 வரை தேதி ஏதும் குறிப்பிடவில்லை என்றால் அது என் தாத்தாவின் ஆவணம் என்பதால் அவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ. 5 ஆவணம் பக்கம் எண். 198 ல் இருந்து 215 வரை வருடம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பிறகு 10 வருடங்கள் கழித்து வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட போலியான ஆவணம் என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ. 11 மற்றும் வா.சா.ஆ. 12 ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல. வழக்கு கோவில் நிர்வாகம் அகமுடையார் சமூகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு கோவிலுக்கு சொந்தமான பூமியில் இருந்து செம்மண் விற்று ரூ.85 லட்சம் கையாடல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த போது இருந்த

பரிகாரத்தை தற்போது மாற்றியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பரிகாரத்தை முற்றிலுமாக மாற்றியதால் வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

3) வழக்கு கோவில் நிர்வாகத்தை காட்டும் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு கோவில் உடன் உள்ள விநாயகர் கோவிலை புணரமைக்கும் போது சாமி சிலைக்கு கீழ் இருந்த தங்க நகைகளை நான் எடுத்து கொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு 6 முதல் 8 பிரதிவாதிகளுடன் நான் கூட்டு சேர்ந்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

4) வழக்கு பரிகாரத்திற்கு நீதிமன்ற ஆள்வரையறை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**(10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி